வெளியீடு எண் 42.

# ஆச்சாள்புரத் தலவரலாறு.

தருமபுர ஆதீனம்.

விலை. 0—2—[illegible]

# ஆச்சாள்புரத் தலவரலாறு

வேண்டுவோர் விலை ரூ. 0—2—0-ம் தபால்கூலி ரூ. 0—1—0-ம் முன்னதாக அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

கிடைக்குமிடங்கள் :-

1 தருமபுர ஆதீன நூல்நிலயப் பரிசோதகர்
தருமபுரம், மாயூரம்.

2 ஆச்சாள்புரம் தேவஸ்தானம் ஆபீஸ்,
ஆச்சாள்புரம், (Via) கொள்ளிடம்.

3 தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையம், 41, உஸ்மான் ரோடு,
தியாகராய நகர், சென்னை-17.

உ

திருச்சிற்றம்பலம்

# ஆச்சாள்புரத் தலவரலாறு

**(திருநல்லூர்ப்பெருமணம்)**

இஃது

இவ்வாலய பரம்பரைத் தருமகர்த்தா

தருமபுர ஆதீனம்

25-ஆவது மகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

திருவுள்ளத்தின்படி

ஆச்சாள்புரம்

ஸ்ரீ சிவலோகத்தியாகராஜ சுவாமி தேவஸ்த்தானத்தில்

வெளியிடப்பெற்றது.

**1955**

விலை அணா 2 ¼

முதற்பதிப்பு 300 பிரதிகள் 1941.
இரண்டாம் பதிப்பு 1000 பிரதிகள் 1943.
மூன்றும் பதிப்பு 1000 பிரதிகள் 1955.

# பொருளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| தலமும் இருப்பிடமும் | 1 |
| தலப் பெயர்கள் | 2 |
| கோயிலமைப்பு | 3 |
| மூர்த்திகள் | 4 |
| தலப்பெருமை | ,, |
| புராணவரலாறு | 5 |
| தீர்த்தங்கள் | 13 |
| தலவிருட்சம் | 15 |
| வழிபட்டோர்கள் | ,, |
| சுற்றுக் கோயில்கள் | ,, |
| மண்டபங்கள் | 16 |
| சிற்பங்கள் | ,, |
| நித்திய பூஜைகளும் திருவிழாக்களும் | ,, |
| சொத்துக்கள் | ,, |
| திருப்பணி | 17 |
| சமயப்பணி | 18 |
| நிர்வாகம் | ,, |
| கல்வெட்டுக்கள் | ,, |
| புராணங்களும், திருப்பாடல்களும் | 23 |

உ

திருச்சிற்றம்பலம்

# ஆச்சாள்புரத் தலவரலாறு

## 1. தலமும் இருப்பிடமும்

அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற்று ஐம்புலனும் அடக்கிய ஞானப்புகலுடையோர்தம் உள்ளப் புண்டரிகத்துள்ளிருக்கும் புராணனாகிய இறைவன், காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ் குறியாம் சிவலிங்கம் முதலாகிய திருமேனிகளிடத்து எழுந்தருளியிருந்து, பூ கைக்கொண்டு தன் பொன்னடி போற்றியும், நாக்கைக் கொண்டு தன் நாமம் நவிற்றியும் வழிபாடுசெய்யும் ஆன்மாக்களுக்குப் பந்தம் அறுத்து அந்தமில் இன்பத்து அழியாவீட்டினை அளித்து, அருள் பாலிக்கும் தலங்கள் எண்ணில. அவைகளுள் சோணாட்டில் கொள்ளிட நதிக்குத் தென்பால் விளங்குவனவற்றுள் **ஆச்சாள் (ஆச்சார்யர்கள்) புரம்** என்பதும் ஒன்று.

தஞ்சை ஜில்லா சீகாழி தாலுக்காவில், மாயூரமிருந்து சென்னைக்குச் செல்லும் புகைவண்டிப் பாதையிலுள்ள கொள்ளிடம் என்னும் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 3 கல் தொலைவிலிருக்கிறது. மட்சாலை வழியாகச் செல்லலாம், வண்டி வசதிகளும் உண்டு.

## 2. தலப்பெயர்கள்

சிவலோகம், நல்லூர், திருமணவை, முத்திபுரம், ஆச்சாள்புரம் எனப் பலபெயர்கள் இத்தலத்துக்கு வழங்கப்படுகின்றன.

**சிவலோகம்:-** வசிட்டர் முதலிய முனிவர்கட்குச் சிவலோகம் காட்டியருளியதால் இத்தலத்திற்கு இப்பெயர் வந்தது.

**நல்லூர்:-** ஆதியில் பிரமதேவன் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு சீகாழிக்குப் போகுங்கால் இத்தலத்தில் உள்ள மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலியவற்றின சிறப்புக்களையும் செழிப்பான பலவளங்களையும் கண்டு 'இஃது ஓர் நல்லூர் ஆகும்' என்றமையால் இப்பெயர் வந்தது.

**மணவை-முத்திபுரம்:-** சைவ சமய முதற்குரவராகிய திருஞானசம்பந்தப்பெருமான், தமது திருமணத்தில் தம் மனைவியரோடும் அடியார்களோடும் பரிசனங்கள் புடைசூழ எழுந்தருளி, இறைவனருளால் தோன்றிய சோதியிற் கலந்து முத்தி எய்தினமையின் மணவை, முத்திபுரம் என்னும் பெயர்களும் வழங்கலாயின.

**ஆச்சாள்புரம்:-** ஆயாள்புரம், ஆச்சாள்புரம் என மருவியது. திருஞானசம்பந்த சுவாமிகளது திருமணக் காலத்தில் அம்மையார் பேதமின்றி யாவர்க்கும் திருவெண்ணீறு அளித்து, சோதியுட் புகுவித்த தலமாதலின் இப்பெயர் பெற்றது. (ஆயாள் = அம்மையார். புரம் = ஊர்.)

## 3. கோயிலமைப்பு

ஆலயம் ஊருக்கு நடுவில் இரண்டு பிராகாரங்களுடன் விளங்குகிறது. உயர்ந்தமதில்களால் சூழப்பெற்றது. முன்புறத்தில் இராஜகோபுரத்தோடு கூடிய வாயில் அழகு செய்கிறது. சுவாமியும், அம்மனும் கிழக்கு முகமாக எழுந்தருளியிருந்து காட்சி யளிக்கின்ருர்கள். வெளிப்பிராகாரத்திலுள்ள நூற்றுக்கால் மண்டபத்தில் திருஞானசம்பந்தர் தோத்திரபூரணி அம்மையாரோடு தனிக்கோயிலில் விளங்குகின்ருர். பக்கத்தில் சனீஸ்வரர் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கின்ருர். இம்மண்டபத்திற்குத் தென்பால் காரியாலயம் இருக்கிறது.

வெளிப்பிராகாரத்தில் தென்கிழக்கில் மடைப்பள்ளி இருக்கிறது. தென்மேற்கில் மாவடிவிநாயகரும், மேற்கில் முருகக்கடவுளும் எழுந்தருளியிருக்கின்ருர்கள். வடமேற்கில் அம்மையார் ஆலயமும், வடகிழக்கில் யாக சாலேயும் விளங்குகின்றன.

உட்பிராகாரத்தில் தெற்குத் திருமாளிகைப்பத்தியில் அறுபான்மும்மை நாயன்மார்கள் காட்சியளிக்கின்ருர்கள். மேலேத் திருமாளிகைப்பத்தியில் சோமாஸ்கந்தர், இலக்குமி, விநாயகர், முருகன், சந்திரசேகரர் முதலாகிய உற்சவமூர்த்திகள் எழுந்தருளி இருக்கின்றனர். வடக்குத் திருமாளிகைப் பத்தியில் பூகைலாச நாதர், நாகநாதர், சுந்தரேசுவரர், விசுவநாதர், மாதுருபூதேஸ்வரர் ஆகியோர் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கின்றனர். துர்க்கையும் அப்பிராகாரத்திலேயே விளங்குகின்ருள்.

சுவாமிக்கு முன்னுள்ள மகாமண்டபத்தில் வடபால் பள்ளியறையும், சபையும் இருக்கின்றன. கீழ்பால்

சூரியன், பைரவர், அப்பர், சுந்தரர், சம்பந்தர், சந்திரன் ஆகியோர் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கின்றனர்.

## 4. மூர்த்திகள்

இறைவன் திருநாமம் சிவலோகத்தியாகர். இறைவி திருநாமம் திருவெண்ணீற்றுமை யம்மை.

**சிவலோகத்தியாகர்:-** வசிட்டர், விசுவாமித்திரர், துருவாசர்முதலியநாற்பத்தெண்ணுயிரம்முனிவர்களுக்குச் சிவலோகக் காட்சியளித்தமையின் "சிவலோகத்தியாகர்" எனத் திருநாமம் பெற்று விளங்குகின்ருர்.

**திருவெண்ணீற்றுமை:-** திருஞானசம்பந்தப்பெருமான் மணமகளோடும் அடியார்களோடும் சோதி ஆலயத்துள் புக்கபோது மணமக்களிருவர்க்கும் மற்றவர்க்கும் திருவெண்ணீறு அளித்தமையால் "திருவெண்ணீற்றுமை" என்ற பெயர் அம்மையாருக்கு வழங்கி வருகின்றது.

## 5. தலப்பெருமை

வசிட்டர் முதலாகிய முனிவர்களுக்குச் சிவலோகக் காட்சி யளித்தது, முருகப்பெருமான் பூசித்து வழிபட்டது, மாந்தாதா என்னும் அரசனுல் திருப்பணி செய்யப்பட்டுத் திருவிழாவும் நடத்தப்பட்டது, திருஞானசம்பந்த சுவாமிகளது திருமணத்தில் யாவருக்கும் ஒருசேர முத்தியளித்தது, மேலும் அருட்சோதிக்கு ஒளியும் தண்மையும் உண்டெனஅறியாது அக்னியாம் என்று அஞ்சியோடிய

அபக்குவர்களையுங்கூட நந்தியம்பெருமானால் * மறித்து வரச்செய்து சோதியுட் புகுவித்து அருள்புரிந்தது ஆகிய பல பெருமைகளையுடையது.

## 6. புராணவரலாறு

**சிவலோகக் காட்சி அளித்தது:-** முன்னொரு நாள் வசிட்டர், பராசரர், பிருகு, சமதக்னி, விசுவாமித்திரர், அத்திரி, துருவாசர் முதலிய மாபெரும் இருடிகள் யாவரும் ஒன்றுகூடி நீறுபூசி அக்கமணிக் கலன்கள் அணிந்து, ஐம்புலனடக்கி, அஞ்செழுத்தோதி, பதினாயிர வருடங்கள் கடுந்தவம் புரிந்தார்கள். தவத்தின் உறுதியினைக் கண்ட இறைவன் கருணையோடு உமாசமேதராய் இடபாரூடராய்க் காட்சி அளித்து "உங்கள் விருப்பம் யாது ? கூறும்" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

காட்சியினைக்கண்ட முனிவர்கள் ஆனந்த பரவசராய் வீழ்ந்து வணங்கி "கடல் விட முண்ட கருணா மூர்த்தியே! புண்ணிய முதலே! சிவலோகத்தைக் காணவேண்டும் என்னும் அவா மிக்குடையோம். அதனைக்காட்டி அருள் பாலித்தல் வேண்டும்" என்று கூற, "அவ்வாறாயின் நீங்கள் நல்லூருக்கு வாருங்கள் அங்கு அதனைக் காட்டுவோம்" என அருள்செய்தான் ஈசன். உடனே முனிவர்கள் அங்கு நின்றும் புறப்பட்டுப் பல தலங்களையும் வணங்கிக் கொண்டு இங்கு வந்தார்கள். பஞ்சாக்கர தீர்த்தத்தில் நீராடி, சிவலோகங்காணும் பெரும்பேறடைந்தோம் என்ற உணர்வு மீதூர ஆலயத்துட் சென்று

---

* இதற்கடையாளமாக நந்தி வெருட்டி, நந்திமடு என்ற பெயர்களுடைய இடமும், மடுவும் இருக்கின்றன.

இறைவனை வணங்கினார்கள். அவர்கள் முன்னே சிவலோகம் தோன்றியது. விம்மிதமுற்றார்கள். அக் காட்சியைக் காணத்தொடங்கினார்கள்.

நான்முக னிருக்கையும், நாரணன் பதவியும், திசை காப்பாளர் இடங்களும், உருத்திரர் உருத்திர மகளிர் களுடன் நெருங்கி இருக்கும் இடமும் கண்டார்கள். சரியையாதி நாற்பாதங்களையும் அனுட்டித்துப் பேறு பெற்றோர்கள் அமர்ந்திடுமிடமும், அறவோர்கள் இருக்கு மிடமும், பாரிடத் தலைவர்கள் சூழ்ந்திடுமிடமும் சென்று சென்று கண்டு அஞ்சலி செய்தார்கள். இறுதியாக இறைவன் திருமுன்னர்ச் சார்ந்தார்கள். அங்கு கின்னரர், சித்தர், தவத்தோர் முதலியோர்கள் சூழ, பிரமனும் மாலும் குறையிரப்ப, இந்திராதியோர் தத்தமக்குரிய ஆலவட்டம் வீசுதல், கண்ணாடி காட்டுதல் முதலிய தொழில்களைச்செய்ய, வாணாசுரன் குடமுழா முழக்க, உலகம் யாவையும் ஒருகணத்தி லழித்து மறுகணத்திலாக் கும் வலியுடைய குறட்பூதங்கள் பாடுதல் ஆடுதல் புரிய, வேண்டுவார்க்கு வேண்டியன அளித்து முருக னுடனும், அம்மையாருடனும் நவமணி மண்டபத் திடையே அரியணைமிசை வீற்றிருக்கும் கருணாமூர்த்தி யாகிய பேரிறைவனை மெய் புளகம் போர்ப்பக் கண்டார் கள். வீழ்ந்து பணிந்தார்கள். அப்போது சிவலோகக் காட்சி மறைந்தது. முன்னிருந்தவாறே இறைவன் ஆலயத்திலெழுந்தருளி இருந்தான்.

முன்னைய காட்சியையும், பின்னைய காட்சியையும் கண்டு தரிசித்த முனிவர்கள் இறைவன் திருவருளையும், அவர் தமக்கு எளிவந்து காட்சியளித்த கருணையினையும் நினைந்து நினைந்து வியந்தார்கள். பலவாறாகத் தோத்திரம்

செய்தார்கள். சிலநாள் இத்தலத்தில் தங்கித் தத்தம் பெயரால் தீர்த்தங்கள் உண்டாக்கி, இறைவழிபாடியற்றி இத்தலத்தை அரிதினகன்று தங்கள் இருப்பிடமாகிய தபோவனத்தை யடைந்தார்கள்.

**முருகன்:-** தேவர்கள் புடைசூழ, இறைவன் கொலு வீற்றிருக்குங்கால் சூரனதுடலம் பிளந்திட விடுத்த சுடரிலே நெடுவேல் வீரன் முருகப்பிரான் இறைவனை வணங்கி 'எந்தாய்' தேவரீரிடத்தில் ஒன்று கேட்டுத்தெரிந்துகொள்ள அவாவுகின்றேன்'' என, இறைவரும் ஆணைதந்தனர்.

முருகன் "பூவுலகத்தில் சிவலோகத்தையளிப்பதும், தீர்த்த மகிமையுள்ளதும், புண்ணியந்தனை வளர்ப்பதும், அருந்தவர்களும் வானோர்களும் பணிய நீ யென்றும் மகிழ்ந்திருப்பதுமான தலம் ஒன்று உரைத்தருள வேண்டும்'' என்றனன். திருச்செவியேற்ற இறைவனும் உவகை மிக்கு உமையவள் முகத்தை நோக்க, அம்மையாரும் புன்முறுவலித்தனள். பின்னர் இறைவன் 'முருக! மேருவின் தென்பால் சோணாட்டில் சீகாழிக்கு வடக்கே ஓர் தலமிருக்கின்றது. அதன் பெயர் சிவலோகம். வானோர்களும், முனிவர்களும் நம்மை வணங்குதற்காக அங்கு நாடோறும் செல்லுகின்றார்கள். அங்கு நமது முன் பஞ்சாக்கர தீர்த்தம் இருக்கின்றது' என அருளிச்செய்தார். இதனைக் கேட்ட முருகன் இறைவனிடம் விடைபெற்று இத்தலத்து வந்து பஞ்சாக்கர தீர்த்தத்திற் படிந்து இறைவனைப் பூசித்துத் திருமுன் நின்றான். "பெருமறையின் முழு முதலே! சிற்பரமாய் இலங்கி ஓங்கும் பேரொளியே! அருள்வடிவே! சீர்கொண்ட தனிப்பொருளே! சிவலோகத் தியாகா போற்றி'' எனப் பலவாறுகத் துதித்து அருள் பெற்றான்.

**மாந்தாதா:-** இவன் அயோத்தி நகரத்து அரசன். சூரியகுலத்தவன். ஒருநாள் தனது குருவான வசிட்ட முனிவர் சிவகதையினைக் கூறி வருங்கால் இத்தலப் பெருமையினையும் கூறக்கேட்டு மகிழ்ச்சியுடன் வணங்கி, "தமியேன் சிவலோகம் சென்று பஞ்சாக்கர தீர்த்தத்திற் படிந்து உமையொருபாகன் திருவடியை வணங்க விரும்பு கின்றேன். தேவரீர் அருள் புரியவேண்டும்" என்று விண்ணப்பித்தான். முனிவர் "சிவ பணிவிடைக்குள் சிறந்தது அருச்சனையே. அவ்வருச்சனையால் விஷ்ணு உலகமெல்லாங் காத்திடு தொழிலும், அவுணர்தம்மை வென்றிடு வரமும் பெற்றான். பிரமன் படைத்தற்றொழிலைப் பெற்றான். இந்திரன் இந்திராணி இளமுலையின்பம் பெற்றான். சந்திரன் இறைவர் சடைமிசை யிருக்கப் பெற்றான். மற்றைய வானோரும் தத்தமது குறைகளைப் போக்கிக்கொள்ள மண்ணிடத்துவந்து அரன்றனை அர்ச்சிப்பார். ஆகவே சிவார்ச்சனை மிகவும் சிறப் புடையது. அதற்குகந்தது சிவலோகமேயாகும். மேலும் அங்குச் சென்று திருப்பணிகள் புரிதல் மிகுந்த புண்ணியம் தரும். ஆதலால் அங்குச் சென்று தீர்த்தமாடி இறை வனைப் பணிந்து வருக" என்று கூறி விடைகொடுத் தனுப்பினர்.

அரசன் சேனைகள் சூழ நகர்நீங்கித் தில்லை முதலாகிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு இத்தலத்து வந்தான். இயற்கைக் காட்சிகளும் உவமை வகையால் ஈசன் திருக்கோலத்தை நினைவூட்டின. பஞ்சாக்கர தீர்த்தத்தில் மூழ்கிப் புனித நீறணிந்து நாட்கடன் முடித்தான். கோயிலினுட் புகுந்தான். வணங்கினான். கைகள் சென்னிமிசைக் குவியத் தோத்திரித்தான். சிலநாள்

தங்கியிருந்து வழிபாடாற்றினன். ஒருநாள் இறைவனை வணங்குங்கால் 'மன்னவ! இத்தலத்தில் நீ அன்போடு வழிபட்டதால் கருதிய யாவும் உனக்குக் கைகூடும்' என ஆகாயத்தில் ஓர் வாக்கு எழுந்தது.

அதனைச் செவிமடுத்த அரசன் இறைவனருளை வியந்து குருவினுடைய திருவடியை நினைந்து ஏத்தினன். ஏவலாளர்களைக்கொண்டு திருப்பணி செய்து முடித்தான். தீர்த்தத்திற்குப் படித்துறை அமைத்தான். நந்தனவனங்கள் பலவும் உண்டாக்கினன். திருவிழாவும் சிறப்புற நடாத்தி அயோத்தி நகரஞ் சார்ந்தான்.

காகமாமுனிவர்:- திருநீறும் கண்டிகையுமே மெய்ப்பொருளெனக் கொண்டவர். சிவனடியே சிந்திக்கும் பான்மையர். இமயமகன்று காசித்தலத்திற்குச் சென்று கங்கா நதிக்கரையில் தங்கிப் பலகாலம் கடுந்தவம் புரிந்தார். இறைவன் விடைமீது காட்சியளித்து "முனிவ! வேண்டும் வரம்யாது? கூறுக" என்ன, முனிவர் பணிந்து "அடியேன் இனிப் பிறவிக்கடலில் அழுந்தாது, பேரானந்தமடைந்து, தேவரீருடைய திருவடி நீழலில் இருக்க அருள் செய்யவேண்டும்" என்று விண்ணப்பித்தார். அது கேட்ட இறைவன் "முனிவ! நீ விரும்புவது அஃதாயின் சோழநாட்டிலுள்ள சிவலோக மென்னும் தலத்தை யடைக; அத்தலம் முத்தியைக் கொடுக்கும். ஆகலின் இக்கங்காநதியில் மூழ்கிச் செல்லுக" என்று அருள் செய்தார்.

முனிவரும் விம்மிதமுற்று இறைவன் ஆக்ஞையின் படியே அஞ்செழுத்தோதிக் கங்கையில் மூழ்கினர். இறைவன் திருவிளையாடலை யாவர் அறிவார்? மூழ்கின

முனிவர் இத்தலத்து ஓர் தீர்த்தத்தில் எழுந்தார். காட்சி களைக் கண்டார். காட்சிதான் யாது? நிலையியற் பொருளும் இயங்கியற்பொருளும் ஆகிய எல்லாம் இறைவன் வடிவமாய்த் தோன்றியது. என்செய்தார்? தலத்தை மிதிப்பதற்கு அஞ்சினார், தலையாலே நடந்தார், அரன் கோயிலை அண்ணிச் சிவலோகத் தியாகரைப் பணிந்தார். அப்போது "நிருதி திசையில் சென்று தங்குவீர்; சிலநாளில் திருஞானசம்பந்தன் மாதவர் குழாத் தொடும் இத்தலத்தில் வந்து மணஞ்செய்வான். அம் மணத்தில் உமக்கு முத்தி" என அசரீரிவாக்கு எழுந்தது. முனிவரும் அவ்வாக்கின்படியே நிருதி திசையைச் சார்ந்து யோகத்தமர்ந்தார். அவ்வாறிருக்குங்காலத்தில் சிவவுரு தோன்றக் கண்டார். அதனைப் பூசித்து வழிபட்டார்.

சோழநாட்டு அரசன் முனிவர் பெருமையினையறிந்து இத்தலத்து வந்து இறைவனைப் பணிந்து, முனிவரிருப் பிடஞ் சென்று வழிபட்டு அவரிடம் நல்லாசிபெற்றான். முனிவர் அரசனைப்பார்த்து "ஈசனுக்குப் பூசனை சிறப்பாக நடத்த வேண்டுமென்று எண்ணினேன். திருவருளால் இறைவன் ஈண்டுத் தோன்றினன். இவ்விறைவனுக்குக் கோயிலொன்று அமைத்தல்வேண்டும்" என்று கூற, அரசன் வணங்கி "ஐயனே! அடியேன் ஆலயம் அமைத் தற்குவேண்டிய பொருளும், நாடோறும் பூசனை நடை பெறும் பொருட்டு அதற்கு வேண்டிய விளை நிலன் முதலியனவும் பிறவும் இப்பொழுதே தருகிறேன். தேவரீர் அருள்புரிக" என விண்ணப்பித்தான். முனி வரும் இசைந்தார். சொல்லியபடியே அரசனும் ஏவலாளர் களைக்கொண்டு கோயில் எடுப்பித்து, விளை நிலன்களும் அளித்தான். பின்னர் முனிவரையும், பெருமானையும் வணங்கி விடைபெற்றுச் சென்றான். முனிவர் அங்கொரு

தீர்த்தமும் அமைத்துப் பெருமானைப் பூசித்திருந்து திருஞானசம்பந்த சுவாமிகள் திருமணத்தில் முத்தி பெற்றார்.

**கங்கை :-** காசியில் கங்காநதி தீரத்தில் தவஞ் செய்திருந்த காகமா முனிவருக்கு இறைவன் காட்சி யளித்து இத்தல மான்மியத்தைக் கூறுங்கால், அதனைக் கேட்டிருந்த கங்கையும் தவம் செய்தாள். இறைவன் காட்சி தந்து "விரும்பியது யாது" என, "தேவரீர் காகமா முனிவருக்குக் கூறிய சிவலோகத்தில் அடியா ளும் சென்று வணங்க வேண்டும். அருள்புரிக" என்றாள். இறைவனும் அவ்வாறாயின் "அவர் ஏகிய நெறியில் நீயும் செல்க" என்ன, கங்கை பணிந்து இத்தலத்து முனிவர் எழுந்து வாவியில் எழுந்தாள். தலத்தை வலமாக வந்தாள். அதுகண்ட மக்கள் யாவரும் ஈதென்ன வியப்பு என்று தத்தமக்குள் வினவிக்கொண்டார்கள். தேவர்கள் யாவரும் ஒருங்கு கூடிவந்து "இறையோன் சடைவளர் மானே! உயிர்த்தொகை புரிந்த பந்தவல்வினைகள் அனைத் தையும் ஒழிக்கும் பாவையே! உன்னில் மூழ்கும் பொருட்டு வானவர் முதலியோர் காசியில் நின்னைத் தேடுவார்களாதலின் காசியை யடைய வேண்டும். இல்லாவிடின் அப்பதி சிறப்புறாது" எனக்கூறிச் சிவலோ கத்தியாகரையும் பணிந்து "காசிமாநகரினிற் கங்கை யுற்றிடக் கருணை புரிதி" என்று இரந்தனர். கங்கையும் ஆலயத்தினுட் புகுந்து இறைவனை வணங்கி நிற்க, இறைவன் கங்கையை நோக்கி "நீ இத்தலத்தினைத் தரிசித்தாய்; காசிமாநகர் செல்லுதி" என்ன ஆக்ஞாபித் தார். புரமெரித்த தேவே! நின் அருளிதுவாகிற் போது கின்றேன்" எனக் கங்கையும் விண்ணப்பித்தாள். அவ்

விரக்கமான மொழியினைக் கேட்ட இறைவன் "இன்று கார்த்திகை ஞாயிறுதலின் ஆண்டு தோறும் இந்நாளில் இங்கு இப்பொழுது வந்தவாறே வந்து தரிசித்துச்செல்க" என்று அருளிச்செய்தான். கங்கையும் நன்றெனத்தேறிப் பணிந்து காசியை யடைந்தாள்.

**திருஞானசம்பந்தர் :-** உலகம் உய்யவும் பிறமதவலி அழியவும் சைவந்தழைக்கவும் சீகாழிப்பதியில் அவதரித்த செம்மல். மூன்றும் பிராயத்திலேயே அம்மையப்பரால் மெய்ஞ்ஞானம் அளிக்கப்பெற்றுத் திருஞானசம்பந்தப் பெருமானுயினர். இறைவனது அருள்வழியே அடியார் களோடு சிவஸ்தலங்கள்தோறுஞ் சென்று அமுதளாவிய தண்டமிழ் மொழியால் பாசுரங்கள் பாடிப் பொற்றாளம், சிவிகை, முத்துவிதானம், பொற்கிழி, படிக்காசுமுதலியன இறைவனால் தரப்பெற்றும்; விடத்தால் இறந்த வணிகனை உயிர்ப்பித்தல், மறைக்கதவினை அடைத்தல், பாண்டிநாடு சென்று புறச்சமயத்தை வாதில் வென்று திருநீற்றொளி தழையச்செய்தல், திருமயிலாப்பூரில் என்பைப் பூம் பாவையாய் உயிர்ப்பித்தல் முதலிய எண்ணிறந்த அற்புதங்களை நிகழ்த்தியும் சீகாழி வந்தடைந்தனர். தாய் தந்தையர் சுற்றம் முதலியோர்களது வேண்டுகோட் கிணங்கத் தமது பதினாறுவது பிராயத்தில் நல்லூரின்கண் நம்பாண்டார் நம்பிகளது திருமகளாகிய தோத்திர பூரணியை மணம்செய்ய அடியார்கள் அனைவரும் புடை சூழச் சிவிகையூர்ந்து இத்தலத்திற்கு வந்தருளினர். வேதியர் நம்பாண்டார் இல்லில் வேத விதிப்படி மணச் சடங்கியற்றினர்கள். அக்கினியை மணமகளோடும் வலம்வரும்போது திருவருளால் இவ்வக்கினியாவது நம்மிறைவன் திருவுருவே என்ற எண்ணம்வர, இவ் வுலகியல்வாழ்க்கை தொடர்ந்ததே என்று நினைந்துவருந்தி

" இல்லாளோடும் நின் பாதமலர் சேரும் பருவம் ஈதென்றும் " விண்ணப்பித்தனர். சிவலோகத்தியாகரது ஆலயத்தை நோக்கி மணமகளோடும் மணத்தின் வந்த அனைவரோடும் எழுந்தருளினர். அவ்வமயத்து அரனுர் உருவேயாய்விளங்கும் மெய்ஞ்ஞான ஒளியாய் விண்ணுற நிமிர்ந்து நின்று வாசலும் வகுத்துக்காட்டியருளினர். ஞான சம்பந்தர் ஆணையின்படியே மணத்துக்கு வந்திருந்த முருகர், நீலநக்கர், பெரும்பாணர் முதலிய அளவிறந்த அடியார்கள் அச்சோதியினுட் புக்கனர்.

அருட்சோதிக்குத் தண்மையு முண்டெனச் சிலர் அறியாது அஞ்சி மீண்டு செல்லத்தலைப்பட்டனர். நந்தியம் பெருமானும் அவர்களுக்குமுன்னர் ஓடிவளைத்து, அதிலும் அகப்படாது ஓடுகின்றவர்களைப் பாய்வதுபோல் முனிந்து தீங்கிழைக்காமல் கொணர்ந்தார். பிள்ளையார் அவர்களை நோக்கி "நீவிரும் தீர்த்தத்தில் நீராடிச் சோதியுட்புகுமின்" என்ன, யாவருமதில் மூழ்கிநின்றுர்கள். அப்போது உமை யம்மையார் தோன்றி அவர்களுக்கு வெண்ணீறு அளிக்கச் சிவஞானமடைந்து சோதியுட் புகுந்தார்கள். இறுதியாக ஞானசம்பந்தப் பிள்ளையார் தாமும் தம்காதலியைக் கைப் பற்றிக் " காதலாகி " என்னும் திருப்பதிகத்தை ஓதிச் சோதியுட்புகுந்து கலந்து மீளாநெறியாகிய பாதமலரின் நிழல்சேர்ந்தார்.

## 7. தீர்த்தங்கள்

பஞ்சாக்கர தீர்த்தம், பிருகுதீர்த்தம், அசுவதீர்த்தம், வசிட்டதீர்த்தம், அத்திரிதீர்த்தம், வியாசதீர்த்தம், மிருகண்டுதீர்த்தம், அகத்தியதீர்த்தம், சமதக்னிதீர்த்தம், முதலிய தீர்த்தங்கள் இருக்கின்றன. பஞ்சாக்கரதீர்த்தம் நீங்கலாக ஏனைய தீர்தங்களும் கீழ்த்திசை முதலாக

முறையே எண்திக்குகளிலும் அமைந்திருக்கின்றன. ஆங்காங்கு அமைக்கப்பட்ட முனிவர்கள் பெயரால் அவ்வெட்டுத் தீர்த்தங்கட்கும் பெயர்கள் வழங்கப்பெறு கின்றன.

பஞ்சாக்கர தீர்த்தம்:- இறைவன் பேரருளால் தனது கரத்திலுள்ள சூலப்படையினைப் பூமியில் நாட்டி எடுத்து அப்பள்ளத்தில் முடியிலுள்ள கங்காநீரினைப் பெய்து நிறைத்து ஆன்மாக்கள் மூழ்கி உய்யும்பொருட்டு வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவதும், காதலாகி ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பதுமான பஞ்சாக்கரத்தைத் தாபித் தான். அதனால் இப்பெயர்பெற்றது.

வேதாந்தனென்னும் அந்தணன் காமனுடன் போர் செய்ய ஆற்றுதவனாகி அவன் வயப்பட்டு மடவாரின் பத்தில் ஈடுபட்டும், வழிப்போவார்களை வதைத்துப் பொருளை அபகரித்தும் வாழ்ந்து வந்தான். குல ஒழுக் கத்தை விட்டான். தாய் தந்தையர்கள் கூறும் சொற் களையும் கேட்டானில்லை. தன்னைத் துன்புறுத்திய சுற்றத் தார்களுக்குப் பயந்து தன் ஊரைவிட் டகன்றான். ஊர் ஊராய்த் திரிந்தான். ஆங்காங்கும் அவனையொத்த குண முடைய நண்பர்கள் பலர் கூட்டுறவாயினார்கள். அக் கூட்டுறவு அவனது குணத்தைப் பெருகச் செய்தது.

இவ்வாறு இவன் திரிந்தலைந்து இறுதியாக நல்வினைப் பயனால் இத்தலத்து வந்தான். அப்போது கோடைக்கால மாதலின் இத்தீர்த்தத்தில் நீராடினான். எழுந்தான். சிவலோகத்தியாகருருவம் கண்ணுக்குப் புலப்பட்டது. அன்றிரவு இத்தலத்தில் தங்கினான். மறுநாள் புறப்பட்டுப் பல இடங்களுக்குஞ் சென்றான். குறித்த வயது முடிந்த

வுடன் இயமதூதுவர்களால் நரகலோகத்திற்குக் கொண்டு போகப்பட்டான். அப்போது வழியில் சிவகணங்கள் தோன்றித் தடுத்து, ''தூதுவர்களே! இவன் நல்லூரில் பஞ்சாக்கர தீர்த்தத்தில் நீராடியதனுல் பாவங்கள் தீர்ந்து விட்டன'' என்று கூறித் தூதுவர்களிடத்திலிருந்து விடுவித்து, விமானத்தின் மீதிருத்தி வானரமகளிர் சூழக் கயிலேக்கு அழைத்துச் சென்று இறைவன் திருமுன் விட்டனர். உடனே வேதாந்தன் வீழ்ந்து வணங்கி அப்பெருமான் ஆணேப்படி கணுதிபனுகி நித்திய வாழ்வு பெற்றிருந்தான்.

## 8. தலவிருட்சம்

தலவிருட்சம் வில்வம்.

## 9. வழிபட்டோர்கள்

பிரமன், முருகன், வேதாந்தன், வசிட்டர், பராசரர்' பிருகு, விசுவாமித்திரர், சமதக்னி, அத்திரி, துருவாசர், அசுவர், வியாசர், மிருகண்டு, அகத்தியர், மாந்தாதா, காகமாமுனிவர், கங்கை ஆகியோர்கள் இத்தலத்திறைவனே வழிபட்டுப் பற்பல பேறுகளேப் பெற்றுள்ளார்கள்.

## 10. சுற்றுக்கோயில்கள்

தென்மேற்கு மூலேயிலும் வடமேற்கு மூலேயிலுமாக விநாயகராலயங்கள் இரண்டு இருக்கின்றன.

## 11. மண்டபங்கள்

சிறப்பாக உள்ளது நூற்றுக்கால் மண்டபம். அஃது உற்சவ மண்டபம் எனவும் வழங்கப்படும்.

## 12. சிற்பங்கள்

சில சிற்பங்கள் பல்லவர்கள் காலத்துச் சிற்பத்திறனை விளக்குவனவாக இருக்கின்றன.

## 13. நித்தியபூஜைகளும், திருவிழாக்களும்

காரண காமிக ஆகமமுறைப்படி நாடோறும் ஐந்துகால பூஜைகள் நடைபெறுகின்றன. வைகாசி மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகின்றது.

பிரமோற்சவம் முடிந்த மூன்றும் நாள் வைகாசி மூலத்தன்று தோத்திர பூரணம்பிகையோடு திருஞான சம்பந்தப் பெருமான் திருமணம், பஞ்சாக்கரத் திருப்பதிக மாகிய தேவார தோத்திரத்துடன் முத்தியெய்திய காட்சி ஆகியவை திருவிழாவாக நடத்தப்பெறுகின்றன.

## 14 சொத்துக்கள்

நன்செயில் சமார் 170 ஏக்கரும், புன்செயில் சுமார் 70 ஏக்கரும் நிலங்கள் இருக்கின்றன. சுமார் 1800ரூ மதிப்புள்ள திருவாபரணங்களிருக்கிறன. சர்க்காரிலிருந்து மோகினித்தொகை ரூ 570-8-0 கிடைக்கிறது. வெள்ளி ரிஷப வாகனமொன்றும் இருக்கிறது.

## 15. திருப்பணி

அம்மையார் கோயில் இராஜகோபுரம் பழுது பட்டிருந்ததால் அதனை இடித்தெடுத்துவிட்டுக் கோபுரவேலை காட்டிக் கட்டப்பெற்றுள்ளது. சுவாமி சந்நிதி மகாமண்டபத்தில் உடைந்து போயிருந்த மேற்பாவுக்கற்களை எடுத்து விட்டுப் புதுக்கற்கள் போடப்பெற்றன. சபைக்குப் பக்கத்தில் பாதுகாப்பு அறை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. சுவாமிகோயில் பிரகாரம் முழுதும் சிமெண்ட்கல் போட்டுத் தளவரிசை செய்யப்பெற்றது. சுவர்கள் முழுவதும் சுறண்டி வெள்ளை பதியப் பெற்றன. மேலப் பிரகாரத்தில் நந்தவனத்திற்குச் சுற்றுச் சுவர்கள் கட்டி வளர்ச்சி செய்விக்கப்பெற்று வருகிறது. திருக்குளம் பாய்கால் வடிகால் கட்டிச் சுத்தமாக வைக்கப்பெற்று வருகிறது. திருஞானசம்பந்த சுவாமி கோயில் மதில்களுட்பட பழுது பார்த்துச் சிமெண்ட்பூசப் பெற்றது.

சுவாமிகோவில் பிரகாரங்கள் பழுதுபார்த்துப் புதிதாகக் கல்போடப்பட்டிருக்கிறது. மழைஜலம் வெளியில் போக சாலபம் திருத்திக்கட்டப் பட்டிருக்கிறது. தேர்ச்சீலை புதிதாகச்செய்து வைக்கப்பட்டிருக்கிறது. வாகனங்கள் பழுது பார்த்து வர்ணம் வைக்கப்பட்டன. தக்ஷிணாமூர்த்தி பின்னப்பட்டிருந்தது; அதற்குப் பதிலாகப் புதிதாக ஒன்று செய்துவைத்து கும்பாபிஷேகம் செய்விக்கப்பெற்றது. கோவில் முழுதும் மின் விளக்குகள் பொருத்தப் பட்டிருக்கின்றன. ஒலிபெருக்கி அமைத்துத் திருமுறைப் பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன.

**சமயம்:-** கோவில் உட்புறச்சுவர்களில் திருமுறைப் பாடல்கள், தலபுராணப் பாடல்களில் சிறப்பாக உள்ள

வைகள் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன. திருமுறை ஆசிரியர் ஒருவரை நியமித்து மாணவமாணவிகளுக்கு திருமுறைப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 16. சமயப்பணி

திருவிழா நாட்களிலும் ஏனைய சிறப்பு நாட்களிலும் புலவர்களால் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவிக்கப் பெறுகின்றன. யாத்திரை செய்வோர்கள் தலப்பெருமையினைச் சுருக்கமாக அறிந்து வழுபட்டுய்யவேண்டி "ஆச்சாள்புரத் தலவரலாறு" என்னும் இவ் உரைநடை நூல் அச்சியற்றி வழங்கப்பெறுகிறது. இஃது இப்பொழுது மூன்ருவது பதிப்பாக வெளிவருகிறது.

## 17. நிர்வாகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின் பரிபாலனத்திற்கு உட்பட்ட தேவஸ்தானங்களுள் ஒன்று. ஆதீன கர்த்தரவர்களாக எழுந்தருளியிருக்கும் 25ஆவது மகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** அவர்கள் ஆட்சியேற்ற (7-5-1945) நாள் முதல் இவ்வாலயத்தையும் பரிபாலனம் செய்துவருகிருர்கள்.

## 18. கல்வெட்டுக்கள்

பெரிய பிராகாரத்தில் உள்ள திருமதிலில் 3-பக்கங்களிலும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. உட்பிராகாரத்திலும், வடக்குப் பிராகாரத்தின் உட்சுவரிலும் காணப்படுகின்றன. 1918-ல் அரசாங்கத்தார் அவை

களுக்கு நகல் எடுத்துப் போயிருக்கிறார்கள். தஞ்சை ஜில்லா கெஜட்டியர் 254, 255-ம் பக்கங்களில் இவ்விடத்தில் ஆங்கிலேயருக்கும் தஞ்சை மன்னன் படைகளுக்கும் 1749-ல் ஒரு பெரும் கடும்போர் நிகழ்ந்ததாகவும் அதில் லாரென்ஸ் என்பவர் இக்கோயிலைக் கைப்பற்றுவதென்ற தீர்மானத்தில் இருந்ததாகவும், கோயிலைக் காப்பாற்றும் கருத்துடன் அங்கிருந்த பிராமணர்கள் கோயிலின் உள்ளே இருக்கும் புனிதமான இடங்களை அழித்துவிடாமலிருக்கும்படி வேண்டிக் கொண்டு திறந்து விட்டதாகவும், குறிப்பிடப்பெற்றிருக்கின்றன.

இக்கோயிலின், சுற்றுச்சுவர்களில் சோழமன்னரில் விக்கிரம சோழன், மூன்ருங்குலோத்துங்கன், இரண்டாம் இராசாதிராச தேவன், மூன்ரும் இராசராசன் இவர்கள் காலங்களிலும், பாண்டியரில் மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி பராக்கிரம பாண்டியன் காலத்திலும் வெட்டப்பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக்கல்வெட்டுக்களில் இறைவர், ஸ்ரீகைலாச முடையார், திருப்பெருமண முடைய மகா தேவர், திருப்பெருமண முடைய நாயனுர் என்னும் பெயர்களால் குறிக்கப் பெற்றுள்ளனர்.

அம்மன்கோயிலைக் கட்டியவர்:- இக்கோயிலைக்கட்டி, இதில் திருக்காமக்கோட்டமுடைய நாச்சியாரை எழுந்தருளுவித்தவர் சயங்கொண்ட சோழமண்டலத்துப் புலியூர்க் கோட்டமான குலோத்துங்க சோழவளநாட்டு நெற்குன்றத்தில் இருந்த சந்திரசேகரன் பஞ்சநதிவாணன் ஆவர். இவர் இந்நாச்சியார்க்கு வேண்டும் நிவந்தங்களுக்கு விருதராச பயங்கர வளநாட்டு விளத்தூர் நாட்டுச்

செம்பியன் நெற்குன்றத்தில் ஐந்துவேலி நிலத்தைத் தேவ தான இறையிலியாக விட்டிருந்தார். இந்நிலம் சேரவல்லா மையினால், இந்நிலத்திற்குத் தலைமாறு (பதிலாக) பற்றுக்கு இடம் வேண்டும் நிலத்துக்கு உடலாக இராசாதி ராச வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டுச் செம்பியன்குடி யிலே மூன்றே மூன்று மாக்காணி முந்திரிகை கீழரை நிலத் தையும் செம்பங்குடி செற்றூர் என்று கூடின நிலத்திலே முக்காலே மூன்றுமா நிலத்தையும் தேவதான இறையிலி யாக விட்டார். இது நிகழ்ந்தது மூன்றுங்குலோத்துங்க சோழதேவரின் இராச்சிய ஆண்டு முப்பத்திரண்டு, நாள் 327ல் ஆகும்.

திருஞானசம்பந்தரைப்பற்றிய செய்திகள்:- இவ்வூர்க் கல்வெட்டுக்களில் திருஞானசம்பந்தப் பெருந்தகையார் ஆளுடைய பிள்ளையார், பரசமயகோளரியார் என்னும் திருப்பெயர்களால் அழைக்கப் பெற்றுள்ளனர். இவரு டைய நாச்சியாரின் திருப்பெயர் சொக்கியார் என்ப தாகும். இச்செய்தி “இந்நாயனார் கோயில் ஆளுடைய பிள்ளையாரும் சொக்கியாரும் காவேரிக்குத் தெற்கு வடக்கூர்களில் திருவெண்காட்டிலும், திருநனிபள்ளி யிலும், திருவாக்கூரிலும் எழுந்தருளிப் பின்பு பெரும்பற்றப் புலியூரிலே எழுந்தருளுகிற இடத்து” என்னும் திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவரின் யாண்டு இரண்டாவது நாள் நாற்பத்தைந்தில் வெட்டப்பட்ட கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது.

சம்பந்தப் பெருந்தகையார்க்கு இவ்வூரில் திருமணம் நிகழ்ந்ததைப்பற்றி:- “இக்கோயில் உடைய பிள்ளையார் திருக்கல்யாணம் பண்ணிய திருமாளிகையும், திருவீதி யும், திருநந்தவனமும், திருமடை விளாகமும் நிலம் ஆறு

மாவும்'' என்னும் கல்வெட்டுப்பகுதி தெரிவிக்கிறது. இவ்வூரில் பரசமயகோளரிமடம் என்று ஒரு மடம் இருந்தது. இதில் பெருமணமுடையார் கோயில் மாகேசுவரர்களுக்கும், கும்பிடவந்த ஆண்டார்களுக்கும், அமுது செய்தருளுகைக்கு மடப்புறமாக நிலம் விடப் பெற்றிருந்தது. இச்செய்தி விக்கிரம சோழதேவரின் மூன்றும் ஆண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது.

ஆளுடையபிள்ளையார் திருநந்தவனம் :- ஆளுடைய பிள்ளையாரின் திருநாமத்தால், சாத்தமங்கலமான சிவ சரணசேகரநல்லூரில், மூன்றுமாக்காணி அரைக்காணி நிலத்தை, திருவாதவூர்ப்பிள்ளை என்பவர் வாங்கித் திரு நந்தவனத்திற்கு விட்டிருந்தனர்.

பரசமயகோளரிநல்லூர் :- ஞானசம்பந்தர்க்குரிய பரசமயகோளரி என்னும் பெயரால் ஒரு ஊர் இருந்தது. அதற்குப் பரசமயக்கோளரிநல்லூர் என்று பெயர். இச் செய்தி "திரிபுவன வீரதேவர்க்குப் பத்தாவது நாளில் திரிபுவன வீரமங்கலம் என்று பிரிந்த நிலத்தால் நெல்லுக் கும் பல......... இறையிலியாக விட்ட நிலத்தால் நெல்லுக் கும் தலைமாறு கிளைதரம் பார்க்கிற இடத்து பரசமய கோளரிநல்லூர் அவன ஊச்சந்திரவதிக்குக் கிழக்கு'' என்னும் கல்வெட்டுப்பகுதியால் அறியக்கிடக்கின்றது.

ஆயிரத்து எண்ணூற்றுவன் சந்தி :- ஆளுடைய பிள்ளையார் அவரது நாச்சியாராகிய (consost) சொக்கியார் இவர்களின் பிரதிமங்களைத் தென்பால் உள்ள ஊர்களாகிய திருவெண்காட்டிலும், திருநனிபள்ளியிலும், திருவாக் கூரிலும் எழுந்தருளச்செய்து, பின்பு பெரும்பற்றப்புலியூரில் எழுந்தருளப் பண்ணிவந்தார்கள். அங்ஙனம் பெரும்

பற்றப்புலியூர்க்கு எழுந்தருளப்பண்ணும்போது, மேற்படியார்களின் பிரதிமங்களைக் கிராமப்பிரதட்சிணமாகக் கொண்டுவந்து கைலாசமுடையார் திருக்கோயிலில் எழுந்தருளச்செய்து, அவர்களின் திருவடிகளை விளக்கி அமுது செய்தருளுவிப்பது வழக்கம் என்பதைத் திரிபுவனச் சக்கரவர்த்தி ராஜராஜ தேவரின் இரண்டாமாண்டு நாற்பத்தைந்தாம் நாள் கல்வெட்டு உணர்த்துகின்றது. அந்நாளில் சிறுகாலைச் சந்தியிலே ஆயிரத்து எண்ணூற்றுவன் சந்தி என்று பிள்ளையாரும் சொக்கியாரும் அமுது செய்தருளுகைக்கும் அவர்கள் அமுது செய்தருளியதை அபூரிகளாய் வந்த பிராமணர்க்குத் திருமுன்பே பிரசாதிக்கக் கடவதன் பொருட்டும் நிலநிவந்தங்கள் அளிக்கப்பெற்றிருந்தன.

இவ்வூரைத் தன்னகத்துக்கொண்டுள்ள நாடு :- இவ்வூர், வடகரை ராஜாதிராஜ வளநாட்டு, வெண்ணெய் ஊர்நாட்டுப் பஞ்சவன் மாதேவியான் குலோத்துங்க சோழச் சதுர்வேதிமங்கலத்தில் அடங்கி இருந்தது.

இவ்வூர்க்கு அருகில் உள்ளனவாகக் கூறப்பட்ட ஊர்கள் :- மாணிக்கவாசகநல்லூர், ஆலாலசுந்தரநல்லூர், சிவசரணநல்லூர் முதலானவைகள் ஆகும்.

பிறசெய்திகள்:- இவ்வூர்க்கோயிலில் உள்ள நடராசப் பெருமான் பண்பதைக்க ஆடு நாயனுர் என்னும் பெயரால் குறிக்கப்பெற்றுள்ளனர்.

See the Annual report on South Indian Epigraphy for the year 1918, Numbers 522-540.

# 19. புராணங்களும் திருப்பாடல்களும்

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரவர்களால் இயற்றப்பட்ட தலபுராணம் அச்சிடப்பட்டிருக்கிறது. 531 திருவிருத்தங்கள் கொண்டது. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய திருப்பதிகங்களும் உள்ளன.

**திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த**

## தேவாரம்

பண்-அந்தாளிக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே

தருமண லோதஞ்சேர் தண்கட னித்திலம்
பருமண லாக்கொண்டு பாவைநல் லார்கள்
வருமணங் கூட்டி மணஞ்செயு நல்லூர்ப்
பெருமணத் தான்பெண்ணொர் பாகங்கொண் டானே.

அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்
றின்புறு மெந்தை யிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே.

வல்லியந் தோலுடை யார்ப்பது போர்ப்பது
கொல்லியல் வேழத் துரிவிரி கோவணம்
நல்லிய லார்தொழு நல்லூர்ப் பெருமணம்
புல்கிய வாழ்க்கையெம் புண்ணிய னார்க்கே.

ஏறுகந் தீரிடு காட்டெரி யாடிவெண்
ணீறுகந் தீர்நிரை யார்விரி தேன்கொன்றை
நாறுகந் தீர்திரு நல்லூர்ப் பெருமணம்
வேறுகந் தீருமை கூறுகந் தீரே.

சிட்டப்பட் டார்க்கெளி யான்செங்கண் வேட்டுவப்
பட்டங்கட் டுஞ்சென்னி யான்பதி யாவது
நட்டக்கொட் டாட்டரு நல்லூர்ப் பெருமணத்
திட்டப்பட் டாலொத்தி ராலெம் பிரானிரே.

மேகத்த கண்டனெண் டோளன்வெண் ணீற்றுமை
பாகத்தன் பாய்புலித் தோலொடு பந்தித்த
நாகத்த னல்லூர்ப் பெருமணத் தானல்ல
போகத்தன் யோகத்தை யேபுரிந் தானே.

தக்கிருந் தீரன்று தாளா லரக்கனை
உக்கிருந் தொல்க வுயர்வரைக் கீழிட்டு
நக்கிருந் தீரின்று நல்லூர்ப் பெருமணம்
புக்கிருந் தீரெமைப் போக்கரு ளீரே.

ஏலுந்தண் டாமரை யானு மியல்புடை
மாலுந்தம் மாண்பறி கின்றிலர் மாமறை
நாலுந்தம் பாட்டென்பர் நல்லூர்ப் பெருமணம்
போலுந்தங் கோயில் புரிசடை யார்க்கே.

ஆத ரமணொடு சாக்கியர் தாஞ்சொல்லும்
பேதைமை கேட்டுப் பிணக்குறு வீர்வம்மின்
நாதனை நல்லூர்ப் பெருமண மேவிய
வேதன தாடொழ வீடெளி தாமே.

நறும்பொழிற் காழியுண் ஞானசம் பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
உறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்
கறும்பழி பாவ மவல மிலரே.

திருச்சிற்றம்பலம்.

## பொது நமச்சிவாயத் திருப்பதிகம்.

பண்–கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாமம் நமச்சி வாயவே.

நம்பு வாரவர் நாவி னவிற்றினுல்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்ப னாமம் நமச்சி வாயவே.

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்க னாமம் நமச்சி வாயவே

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினுல்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாமம் நமச்சி வாயவே.

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே.

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னுமம் நமச்சி வாயவே.

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ளுமம் நமச்சி வாயவே.

போதன் போதன கண்ணனு மண்ணறன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓது நாமம் நமச்சி வாயவே.

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுண் கண்ட னமச்சி வாயவே.

நந்தி நாமம் நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாச மறுக்க வல்லார்களே.

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் புராணம்.

### (திருமணம்)

காழிநா டுடையபிரான் கழல்வணங்கி மகிழ்வெய்த
ஆழியினும் மிகப்பெருகு மாசையுடன் திருமுருகர்
வாழிதிரு நீலநக்கர் முதற்றெண்டர் மற்றெனையோர்
சூழுநெடுஞ் சுற்றமுடன் தோணிபுரந் தொழுதணைந்தார்.

பெருமகிழ்ச்சி யுடன்செல்லப் பெருந்தவத்தால் பெற்றவரும்
மருவுபெருங் கிளையான மறையவரு முடன்கூடித்
"திருவளர்ஞா னத்தலைவர் திருமணஞ்செய் தருளுதற்குப்
பருவமிது" என்றெண்ணி அறிவிக்கும் பாங்கணைந்தார்.

அருமறையோ ரவர்பின்னுங் கைதொழுதங் கறிவிப்பார்
"இருநிலத்து மறைவழக்கம் எடுத்தீர்நீர் ஆதலினுல்
வருமுறையால் அறுதொழிலின் வைதிகமா நெறியொழுகும்
திருமணஞ்செய் தருளுதற்குத் திருவுள்ளஞ் செய்யும்"என

மறைவாழ அந்தணர்தம் வாய்மையொழுக் கம்பெருகும்
துறைவாழச் சுற்றத்தார் தமக்கருளி உடன்படலும்
பிறைவாழுந் திருமுடியிற் பெரும்புனலோ டரவணிந்த
கறைவாழுங் கண்டத்தார் தமைத்தொழுது மனங்களித்தார்

ஏதமில்சீர் மறையவரில் ஏற்றகுலத் தோடிசைவால்
நாதர்திருப் பெருமணத்து நம்பாண்டார் நம்பிபெறும்
காதலியைக் காழிநா டுடையபிரான் கைப்பிடிக்கப்
போதுமவர் பெருந்தன்மை எனப்பொருந்த எண்ணினுர்.

"ஞானபோ னகருக்கு நற்றவத்தின் ஒழுக்கத்தால்
ஊனமில்சீ லத்தும்பால் மகட்பேசி வந்த"தென
"ஆனபே றந்தணர்பால் அருளுடமை யாம்என்று
வானளவு நிறைந்தபெரு மனமகிழ்ச்சி யொடுமொழிவார்.

''உம்முடைய பெருந்தவத்தால் உலகனைத்தும் ஈன்றளித்த
அம்மைதிரு முலைப்பாலிற் குழைத்தஆ ரமுதுண்டார்க்
கெம்முடைய குலக்கொழுந்தை யாமுய்யத் தருகின்றோம்
வம்மின்'' என உரைசெய்து மனமகிழ்ந்து செலவிடுத்தார்.

பேருவகை யாலிசைவு பெற்றவர்தாம் மீண்டணைந்து
காருலவு மலர்ச்சோலைக் கழுமலத்தை வந்தெய்திச்
சீருடைய பிள்ளையார்க் கவர்நேர்ந்த படிசெப்பிப்
பார்குலவுந் திருமணத்தின் பான்மையினைத் தொடங்குவார்.

வேத வாய்மையின் விதியுளி வினையினால் விளங்க
ஓத நீருல கியன்முறை ஒழுக்கமும் பெருகக்
காதல் நீள்திருத் தொண்டர்கள் மறையவர் கவினார்
மாதர் மைந்தர்பொற் காப்புநாண் நகர்வலஞ் செய்தார்

ஆர்வம் மிக்கெழும் அன்பினால் மலரயன் அனைய
சீர்ம றைத்தொழிற் சடங்குசெய் திருந்துநூல் முனிவர்
பார்வ ழிப்பட வருமிரு வினைகளின் பந்தச்
சார்பொ ழிப்பவர் திருக்கையிற் காப்புநாண் சாத்த.

ஏல இந்நலம் யாவையும் எழுச்சிமுன் காட்டும்
காலை செய்வினை முற்றிய கவுணியர் பெருமான்
மூல மாகிய தோணிமேல் முதல்வரை வணங்கிச்
சீல மார்திரு வருளினால் மணத்தின்மேற் செல்வார்.

தவஅர சாள உய்க்குந் தனிக்குடை நிழற்றச் சாரும்
பவமறுத் தாள வல்லார் பாதமுள் ளத்துக் கொண்டு
புவனங்கள் வாழ வந்த பூந்தராய் வேந்தர் போந்து
சிவனமர்ந் துறையும் நல்லூர்த் திருப்பெரு மணத்தைச் சேர்ந்தார்.

விண்ணவர் மலரின் மாரி விசும்பொளி தழைப்ப வீச
மண்ணகம் நிறைந்த கந்த மந்தமா ருதமும் வீசக்
கண்ணொளி விளக்கம் மிக்கார் காமர்தோ ரணங்களூடு
புண்ணிய விளைவு போல்வார் பூம்பந்தர் முன்பு சார்ந்தார்.

ஆங்குமுன் னிட்ட செம்பொன் அணிமணிப் பீடந் தன்னில்
ஓங்கிய ஞானவெள்ளம் உள்நிறைந் தெழுவ தென்னத்
தாங்கிய முத்தின் பைம்பூண் தண்ணிலா எறிப்ப ஏறிப்
பாங்கொளி பரப்பி நின்றார் பரசம யங்கள் வீழ்த்தார்.

திருமகட் கொடுக்கப்பெற்ற செழுமறை முனிவர் தாமும்
அருமையான் முன்செய் மெய்மை அருந்தவ மனைவி யாரும்
பெருமகிழ்ச் சியினுற் பாதம் விளக்குவார் பிள்ளையார்முன்
உரிமையால் வெண்பால் தூநீர் உடனெடுத் தேந்தி வந்தார்.

பெருகொளி ஞானம் உண்ட பிள்ளையார் மலர்க்கை தன்னின்
மருவுமங் கலநீர் வாசக் கரகமுன் னேந்தி வார்ப்பார்
தருமுறைக் கோத்தி ரத்தின் தங்குலஞ் செப்பி "என்றன்
அருநிதிப் பாவை யாரைப் பிள்ளையார்க் களித்தேன்" என்றார்.

அருப்புமென் முலையி னார்தம் அணிமலர்க் கைப்பிடித்தங்
கொருப்படும் உடையபிள்ளை யார்திரு உள்ளந் தன்னில்
"விருப்புறும் அங்கியாவார் விடைஉயர்த்தவரே" என்று
திருப்பெரு மணத்தைமேவுஞ் சிந்தையில் தெளிந்து செல்வார்.

மந்திர முறையால் உய்த்த எரிவல மாக மாதர்
தந்திருக் கையைப் பற்றுந் தாமரைச் செங்கை யாளர்
'இந்தஇல் லொழுக்கம் வந்து சூழ்ந்ததே இவள் தன்னேடும்
அந்தமில் சிவன்தாள் சேர்வன்" என்னும் ஆதரவு பொங்க.

மலர்பெருங் கிளையும் தொண்டர் கூட்டமும் மல்கிச் சூழ
அலகில்மெய்ஞ் ஞானத்தெல்லை அடைவுறுங் குறிப்பால் அங்கண்
உலகினெம் மருங்கும் நீங்க உடன்அணைந் தருளவேண்டிக்
குலமணம் புரிவித் தார்தங் கோயிலை நோக்கிவந்தார்.

சிவனமர்ந் தருளுஞ் செல்வத் திருப்பெரு மணத்துள் எய்தித்
தவநெறி வளர்க்க வந்தார் தலைப்படுஞ் சார்பு நோக்கிப்
"பவமற என்னை முன்னாள் ஆண்டஅப் பண்பு கூட
நவமலர்ப் பாதங் கூட்டும் என்னுநல் லுணர்வு" நல்க.

காதல்மெய்ப் பதிகம் "கல்லூர்ப்பெருமணம்" எடுத்துக்கண்டோர்
தீதுறு பிறவிப் பாசந் தீர்த்தல் செம்பொருளாக் கொண்டு
"நாதனே! நல்லூர் மேவும் பெருமண நம்பனே! உன்
பாதமெய்ந் நீழல் சேரும் பருவமீ" தென்று பாட.

தேவர்கள் தேவர் தாமுந் திருவருள் புரிந்து "நீயும்
பூவையன் னாளும் இங்குன் புண்ணிய மணத்தின் வந்தார்
யாவரும் என்பாற் சோதி இதனுள்வந் தெய்தும்" என்று
மூவுல கொளியால் விம்ம முழுச்சுடர்த் தாணு வாகி.

கோயிலுட் படமே லோங்குங் கொள்கையாற் பெருகுஞ்சோதி
வாயிலை வகுத்துக் காட்ட மன்னுசீர்ப் புகலி மன்னர்
பாயின ஒளியால் நீடு பரஞ்சுடர்த் தொழுது போற்றி
மாயிருள் ஞால முய்ய வழியினை அருளிச் செய்வார்.

'ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச்சொலாம்'என்
றுனசீர் நமச்சி வாயத் திருப்பதி கத்தை அங்கண்
வானமும் நிலனுங் கேட்க அருள்செய் "திம்மணத்தில் வந்தோர்
ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக" என்ன.


வருமுறைப் பிறவி வெள்ளம் வரம்புகாணு தழுந்தி
உருவெனுந் துயரக் கூட்டில் உணர்வின்றி மயங்கு வார்கள்
திருமணத் துடன்சே வித்து முன்செலுஞ் சிறப்பினாலே
மருவிய பிறவிநீங்க மன்னுசோ தியினுட் புக்கார்.

ஆறுவகைச் சமயத்தில் அருந்தவரும் அடியவரும்
கூறுமறை முனிவர்களும் கும்பிடவந் தணைந்தாரும்
வேறுதிரு வருளினால் வீடுபெற வந்தாரும்
ஈறில் பெருஞ் சோதியினுள் எல்லாரும் புக்கதற்பின்.

காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலங் கொண்டருளித்
தீதகற்ற வந்தருளுந் திருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணியதன் உட்புகுவார்
போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி உடனானார்.

—சேக்கிழார்

ஞானசம்பந்தம் அச்சகம், தருமபுரம்.



ஆலயத் தோற்றம்

# —: தருமபுர ஆதீன வெளியீடுகள் :—

| எண் | புத்தகம் | விலை<br>ரூ..அ. பை. | தபாற்செலவு<br>ரூ. அ. பை. |
|---|---|---|---|
| 1. | திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் திருமுறை (ராப்பர்) | 3—8—0 | 1—5—0 |
| 2. | இரண்டாந்திருமுறை (காலிகோ) | 5—0—0 | 1—8—0 |
| 3. | சமயபோதச்சொற்பொழிவுகள் | 1—0—0 | 0-13—0 |
| 4. | பரமாணு புராணம் | 1—4—0 | 0—9—0 |
| 5. | நித்தியபூஜா லக்ஷண சங்கிரகம் | 1—8—0 | 0—9—0 |
| 6. | திருக்குறள் உரைவளம் பொருட்பால் (காலிகோ) | 13—8—0 | 2—4—0 |
| 7. | காமத்துப்பால் ,, | 6—0—0 | 1—8—0 |
| 8. | திருவாசகம் ,, | 2—0—0 | 0-14—0 |
| 9. | நால்வர் நான்மணிமாலை | 0—4—0 | 0—4—0 |

தொகையை முன்பே அனுப்பிப் பெறல்வேண்டும்.

கிடைக்குமிடங்கள் :—

1. மானேஜர்,
   தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம் போஸ்ட்.
2. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசாரநிலயம்.
   41, உஸ்மான் ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

ஆதீன இசைப்புலவர், இசையரசு

திரு. M. M. தண்டபாணிதேசிகர் அவர்கள் பாடிய,

பாராயணத் திருமுறைப் பாடல்கள்

| | | |
|---|---|---|
| செட் ஒன்றுக்கு விலை | ரூ. | 40—10—0 |
| தபால், பாக்கிங் செலவு | ரூ. | 6—8—0 |

கிடைக்குமிடங்கள் :

1 காஷியர், ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்,
  சீகாழி. தஞ்சாவூர் ஜில்லா.

2 தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசாரநிலயம்,
  41, உஸ்மான் ரோடு, தியாகராயநகர், சென்னை-17.